அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IV.] SEPTEMBER, 1904–ஹு செப்டெம்பர். [இலக்கம் 3.

வாயில்லா ஜந்துக்களை இம்சிப்பதால் வரும் கேடு.

பிராணிகளை இம்சிப்பதனால் உண்டாகும் கேடு மிகப் பிரபலமானது. கொடுமையென்பது முதலில் வாயில்லா ஜெந்துக்கள் விஷயத்திலேயே ஆரம்பமாகின்றது. இக்கொடுமை வாயில்லா ஜந்துக்களை விட்டு அப்புறம் பரவாமலிருந்தாலுங்கூட, அதை நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அவசியம். நமக்கு அடிமைப்பட்டிருக்கும்படியாகப் பிறந்த எளிய வாயில்லா ஜந்துக்கள் விஷயத்தில் நாம் அதிகமான அன்புபாராட்டி அவற்றைப் போஷிப்பது நமது பெரிய கடமையாம். நாம் செய்யும் நன்மைகளுக்காக நம்மிடத்தில் தமக்குள்ள நன்றியையும், நாம் உபேக்ஷயாயிருந்து கொடுமைசெய்வதனா லுண்டாகும் துக்கத்தையும் நம்முடனே வாய்திறந்து சொல்ல அற்பப்பிராணிகளுக்குத் திறமையில்லாம லிருந்தாலும், அவை அவற்றா லுண்டாகும் சுகதுக்கங்களை உணர்கின்றனவென்பது மெய். உண்மையான தெய்வபத்தியுடையவர்களெவரும் எளிய ஜந்துக்களை ஒருவன் துன்புறுத்துவதைக் கண்டால் மனவருத்தப்படாமலிருக்கமாட்டார்கள்.

இப்படியே ஜீவஜந்துக்களை இம்சிப்பதனால் உண்டாகும் பயன் அவைகளுக்குமாத்திரமேயல்ல, இம்சிக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் தொடருகிறது. கொடுமையாக இம்சிக்கப்பட்ட பிராணி வருத்தமடைந்து கைகால் நொண்டியாகிப் புண்பட்ட காயத்தோடு தவிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; துன்பம் செய்தவனுடைய மனத்தில் கொடிய கொலையாளிக்கு உள்ள துர்க்குணம் அமைந்துவிடுகிறது. துன்புறுத்தப்பட்ட ஜீவன் அக்கொடுமைக்குத் தப்பித்துக்கொண்டு நாளளவிலே தன் நோய் நீங்கித் தனக்குச்செய்த பொல்லாங்கையும் மறந்துவிடலாம்; எளிய ஜந்துவை இம்சித்த மனிதனோ, அந்தப் பாபம் ஒருநாளும் நீங்காதவனாகி, மரணமடைந்தபிறகும் அப்பாவத்தின் பலனை அனுபவிக்கவேண்டியவனாகிறான்.

இவ்விதமான பொல்லாங்கானது செய்தவனை மாத்திரமேயன்று; அவனுடைய குடும்பத்தையும் அபாயத்திற்கு உள்ளாக்குகிறது. பூததயை பச்சாத்தாபமும் தருமகுணமுமுள்ள மனிதன் தன்னை அடுத்த பிராணிகளிடத்தில் மிகவும் பக்ஷமுள்ளவனாயிருக்கிறான். தன் வீட்டுப் பிராணிகளிடத்தில் பக்ஷமாயிருக்கவேண்டுமென்பதை ஒருவன் மறந்துவிடுவானானால், உடனே அவன் தன் குழந்தைகளிடத்திலும் கொடுமையுள்ளவனாகத் தலைப்படுகிறான். ஏனென்றால், சிறுபிராயத்தில் எந்தக்கை ஈக்களின் கால்களையும் சிறகுகளையும் பிய்க்கிறதோ, எந்தக் கை பூனைகளைப்பிடித்து வருத்துகிறதோ, பறவைகளைப் பிடித்துச் சித்திரவதை செய்கிறதோ, அந்தக் கைதான் பிற்காலத்தில் தகப்பனையும் தாயையும் தாரத்தையும் தனயர்களையும் தாக்ஷிணியமில்லாமல் அடித்து அபராதப்படுகிறது. எளிய ஜந்துக்களை இம்சிப்பதற்கும் இனத்தானை அடிப்பதற்கும் காரண மொன்றுதான். பிராணிகளை இம்சிக்கிற பொல்லாத குணம் முற்றியே பெற்றோர் முதலான பந்துக்களையும் பீடிக்கும்படியாகிறது.

எளிய பிராணிகளுக்குச் செய்யும் கொடுமை அண்டை அயலார்வரையிலும் போய் எட்டுகிறது. எப்படியென்றால், தன் வீட்டுப்பிராணிகள் செய்யும் சஞ்சலமான செய்கைகளைப் பார்த்துப் பொறுக்கும் சாந்தகுணமில்லாமல் அவைகளைத் துன்புறுத்துகிறவன், அக்கம்பக்கத்தாருடைய விரோதமான காரியங்களைப் பொறுக்கவும் மனந்தாளாமல் அவர்களுடன் சண்டையிடத்தலைப்பட்டுப் பலவிதமான பழிபாவங்களுக்கு உள்ளாகிவிடுவான்.

சிறு குழந்தைக்குச் சிறந்த காவலாளி.

சிலநாளைக்கு முன்னே ஒரு கனவான் ஒரு நாய் வாங்கி வளர்த்துவந்தான். நாளடைவிலே அந்த நாய் அவர்களுடனே நன்றாய்ப் பழகி, அவ் வீட்டுப் பிள்ளைகளுள் தானும் ஒன்றாகிவிட்டது. அவ்வீட்டில் மூன்று பிராயமான ஒரு பெண்குழந்தையை முக்கியமாய் அந்த நாய் எப்பொழுதும் விடாமல் கூடவேயிருந்து காத்துவந்தது. இப்படியிருக்க, பனிகாலத்தில் ஒருதினம் அவ்வீட்டு யஜமானன் வெளியே சவாரிபோய் வீட்டிற்குத் திரும்பிவந்தான்; வீட்டிற்குச் சமீபமாக வரும்பொழுது ஓரிடத்தில் பாதையோரத்திலே ஒரு புலத்தில் தன் நாய் குரைப்பது கேட்டது. யஜமானன் போகிற பாதைக்கும் நாயிருக்கு மிடத்திற்கும் மத்தியில் ஒரு கல்சுவர் இருந்ததனால், அவன் கண்ணுக்கு அந்த நாய் தோன்றவில்லை. நாய் அந்தச் சுவருக்குமேல் எழும்பி எழும்பிக் குதித்து ஓயாமல் குரைத்துக்கொண்டிருந்தது. யஜமானன் அதுகண்டு தக்ஷணமே குதிரையைவிட்டுக் கீழே குதித்து நாய் குரைக்கும் இடம் போய்ப் பார்த்தான். அங்கே தன்னுடைய சிறுகுழந்தை ஒரு பாறையின்மேல் உட்காந்துகொண்டிருந்தது; அச்சிறுமியின் பக்கத்திலே நாய் வாலாட்டிக்கொண்டு காவல் காத்துக்கொண்டு நின்றது. அவ்விடத்திலே அந்தப் பெண் நடந்த காலடி நன்றாகப் பதிந்திருந்தது. இன்னும் அவ்விடத்திலே அவன் நன்றாய் உற்றுப்பார்க்கையில், அங்கே கைப்பிடிச்சுவர் இல்லாத கிணறு ஒன்று காணப்பட்டது. அந்தக் கிணற்றைச் சுற்றிலும் குழந்தை சுற்றிச் சுற்றிப் பலதரம் நடந்த காலடிகளும் காணப்பட்டன. அந்தக் காலடிகள் கிணற்றங்கரை ஓரமாகவே தென்பட்டன. குழந்தையின் காலடிகளுக்கும் கிணற்றுக்கும் மத்தியிலே நாயினுடைய காலடிக் குறிகள் அமைந்திருந்தன. அதைப் பார்த்தபொழுது, குழந்தை கிணற்றோரமாக நடந்துபோகையில் அது கிணற்றில் தவறி விழாதபடி காத்துக்கொண்டு அக் குழந்தைக்கும் கிணற்றுக்கும் மத்தியில் நாய் கூடவே நடந்துபோயிற்றென்பது தெளிவாக விளங்கியது. நாயினது இந்த நற்குணத்தைக் கண்டவளவில் குழந்தையின் தந்தைக்கு உண்டான ஆனந்தத்தை நாம் இவ்வளவென்று இங்கு எடுத்துரைக்க முடியுமோ? அந்த உத்தமமான நாய் அப்படிக் குழந்தைக்கும் கிணற்றுக்கும் நடுவே நடந்துபோகாமலிருக்குமானால் அருமையான குழந்தை அநியாயமாய்க் கிணற்றில் வீழ்ந்து உயிரிழக்க நேர்ந்திருக்குமல்லவா?

இப்படிப்பட்ட நன்றியுள்ள நல்ல உபகாரியான பிராணிகளையோ நாம் உபேக்ஷித்து அநாதரவுபண்ணுவதோடு, அல்லாடித் தவிக்கவிட்டு வருத்தி வேடிக்கை பார்ப்பது?

மனிதருடைய நன்றி மாறாத நேசன்.

நாய்கள் செய்யும் நல்லுதவி.

எல்லாத் தேசங்களிலும் நாய் மிகவும் அருமையான ஒரு வீட்டுப் பிராணியாக மதிக்கப்படுகிறது. பலஜாதி ஜனங்களுக்கும் நாயே நல்ல தோழனாக நினைக்கப்பட்டிருக்கிறது. மனிதர் இப்பூமியில் எவ்விடத்திற்குப் போனாலும், எங்கும் அவர்களை விடாமல் பின்தொடர்ந்து போகிற பிராணி நாய் ஒன்றுதான். தன் யஜமானன் தனக்குச் செய்யும் உபகாரத்திற்குப் பலமடங்கு அதிகமாய், நன்றியோடுகூட நாய் அவனுக்கு அருமையான அநேகம் நன்மைகள் செய்கிறது. ஆட்டுப்பட்டிகளிலே நாய் ஆட்டு மந்தைகளை ஆச்சரியமான வகையாய்க் காப்பாற்றுகிறது: அதாவது, ஆடுகளை மேய்ச்சல் புலங்களுக்கு ஓட்டிக்கொண்டுபோகிறது, அங்கிருந்து மறுபடி ஆட்டுப்பட்டிக்கு அவைகளையோட்டிக்கொண்டு வருகிறது; இராக்காலத்திலும் மழைக்காலத்திலும் சிதறி ஓடிப்போகாதபடி ஆடுகளைக் கும்பலாய்ச் சேர்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது.

மேலும் நாய் பயிர்த்தொழிலாளிகளுக்குப் பெரிய துணைவனும். குடியானவனுடைய கோழிகளைக் குள்ளநரி முதலானவைகள் வந்து திருடிக்கொண்டு போகாதபடி பாதுகாக்கிறது; திருடர்கள் வந்து தொந்தரவு செய்யாதபடி அவர்களுடைய தோட்டங்களையும் வீடுகளையும் பத்திரமாகப் பாதுகாக்கிறது; குடியானவர்களுடைய ஆடுமாடுகளை மேய்ச்சல் புலத்திற்கு ஓட்டிக்கொண்டுபோய் மறுபடி அவற்றை வீட்டுக்குத் திருப்பி ஓட்டிக்கொண்டு வருகிறது. வீட்டுநாய் ஏற்றசமயத்தில் எச்சரிக்கை செய்து பிராணிகளையும் பொருள்களையும் பாதுகாத்ததைப் பற்றி அளவற்ற கதைகள் சொல்லக் கேட்டிருக்கிறோம். நன்றியறிவும் நுட்பபுத்தியுமுள்ள நாய்களின் நல்லுதவி இல்லாவிட்டால், பயிர்த்தொழில் செய்து பயன்பெறுவது அஸாத்தியமான காரியமென்று நாம் உறுதியாகச் சொல்லலாம்.

நாய்களிடத்தில் யஜமானர்கள் நடக்கவேண்டிய விதம்.

இப்படிப்பட்ட நற்குணமுள்ள நாய்கள் தம் யஜமானன் வருவதைக் கண்டவுடனே களிப்படைந்து அவனிடத்திற்குக் குதித்து ஓடுவதை விட்டுப் பின்னடையுமானால், அதுவே அந்த யஜமானன் சுயநயம் பாராட்டுகிறவனும் கொடுமை செய்பவனுமாமென்பதற்குப் போதுமான நல்ல நிதர்சனமன்றோ? 'ஒருவனுடைய வீட்டிலும் வீட்டிற்கு வெளியிலும் வளர்ந்துவருகிற மாடு கன்று பூனை நாய் முதலான வாயில்லாத ஜந்துக்கள் சுகமாயும் சாதுவாயும் இராமல்போனால், அவனது சமயக் கோட்பாடு ஒருகாசு பெறாது' என்று பெரியவர் ஒருவர் சொல்லியிருக்கிறார். இதை எந்த ஜாதியார்தான் சரி என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள்? தங்கள் நாய்களிடத்தில் அதிகமான அன்பு பாராட்டுவதாக அநேகர் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்; ஆனாலும், அந்த நாய்களுக்குச் சாதாரணமாக வேண்டியவைகள் இவையென்று தெரிந்துகொள்ளாமையாலேயே அநேகம் கொடுமைகள் உண்டாகின்றன. தெரியாமையாலே சிலர் தங்கள் தங்கள் நாய்களுக்கு அளவுக்கு மிஞ்சின தீனி கொடுத்துக் கொழுக்கச்செய்கிறார்கள்; உபேக்ஷையாலே சிலர் நாய்களுக்கு உணவே கொடாமல் பட்டினி போடுகிறார்கள்; வேண்டுமென்றே சிலர் நாய்களைக் கல்லால் அடித்தும், காலால் உதைத்தும், பயங்காட்டித் துரத்தியும், பலவிதமாய் இம்சிக்கிறார்கள். இவைமாத்திரமேயல்ல, யஜமானர்கள் இன்னும் என்னென்னவிதமான இம்சைகள் செய்தாலும், நாய்மாத்திரம் எப்பொழுதும் அவர்களுக்கு நன்றி மறவாத நேசனாகவேயிருக்கிறது.

நாய்களை வளர்ப்பவர்கள் அவற்றின் விஷயத்தில் காட்டவேண்டிய பக்ஷம் எப்படிப்பட்டதென்று சற்று ஆலோசித்துப் பார்ப்போம். நாய் தன் யஜமானனே தனக்குத் தெய்வமென்று நம்பி அவனை நேசித்து அவனுக்கு ஒரு அபாயமும் வரவொட்டாமல் காப்பாற்றுகிறது. தனக்கு வாஸயோக்கியமான இடமும் உணவும் அளிக்கும் யஜமானனையே நாய் விரும்புகிறது; அந்த யஜமானனுக்குத் தான் ஆட்பட்டிருப்பதே தனக்குப் பெரிய சந்தோஷமாக நினைத்திருக்கிறது. அப்படிப்பட்ட நல்லபிராணியை நாம் அடித்தும் உதைத்தும் பயங்காட்டியும் வருத்தப்படுத்தலாகுமோ?

நாயை அடிக்காமலே நமக்கு வேண்டிய பற்பல வேலைகளையும் செய்துவரும்படி நாம் பழக்கலாம். அடித்து வருத்துவதைப்பார்க்கிலும் உற்சாகப்படுத்துவதனால் நாம் அதிகமான நன்மை விளைவித்துக்கொள்ளலாம். நாய்களைப் பக்ஷமாக நடத்தி யதேச்சையாக ஓடி யுலாவும்படி விட்டால், அது நாய்களுக்கும் அதிக சந்தோஷமா யிருக்கும், மனிதர்களுக்கும் மிகுந்த நன்மையாகும்.

நாய்களுக்குச் செய்யும் கொடுமையும் அதற்குச் சமாதானமும்.

நாயின் விஷயத்தில் செய்துவருகிற முக்கியமான ஒருகொடுமையாவது: எப்பொழுதும் அதைச் சங்கிலியால் கட்டிவைப்பதாம். நாய்கள் ஓடித்திரிவதற்கே அதிகமான விருப்பமுடையவைகள். ஓடித்திரியாவிட்டால் நாய்களுக்குச் சுகமாயிராது. அப்படியிருக்க, கோடைகாலமென்றும் குளிர்காலமென்றும் பாராமல் என்றைக்கும் ஒருதன்மையாய் நாய்களைச் சிறிய சங்கிலியால் கட்டிப்போட்டு வைக்கிறார்களே, அப்படிக் கட்டிவைக்கப்பட்ட நாய்களே அந்த வேதனை பொறுக்கமாட்டாமல் ஓயாமல் குரைத்து அண்டை அயலாருக்கு அதிகமான வேதனையை உண்டாக்குகின்றன. அவிழ்த்து வெளியே விடக்கூடாத துஷ்ட நாய்களா யிருந்தால், அவைகளை வைத்திராமல் அன்புடன் அப்பொழுதே ஒழித்துவிடுவதுமேல்.

நாய் எவனையாயினும் கடிக்குமானால், யாவரும் அதற்குப் பயப்படவேண்டி யிருக்கிறது. அதற்காக நாய்களை அநேகமாய் அடிக்கிறார்கள், விஷங்கொடுத்துக் கொல்லுகிறார்கள்; அல்லது ஓயாமல் கட்டிப்போட்டு வைக்கிறார்கள். இவைகளில் கட்டிப்போட்டு வைப்பதே நாயை மிகவும் பொல்லாததாக்கிவிடுகிறது. நாயை ஏன் இப்படிக் கட்டிவைத்துக் கொடுமை செய்கிறீர்கள் என்று கேட்டால், அதற்கு மூடத்தன்மையான பல காரணங்கள் சொல்லுகிறார்கள். 'நாயைக் கட்டிவைக்காமல் அவிழ்த்துவிட்டால் அது ஓடிப்போகும்' என்கிறார்கள் சிலர். அது அப்படி ஓடிப்போகாமல் மற்றென்ன செய்யக்கூடும்? மறுபடியும் கட்டிப்போடுவார்களென்கிற பயம் அதற்கு அதிகமாகிவிட்டதல்லவா? 'அவிழ்த்து விட்டுவைத்தால் வழியே போகிறவர்களை நாய் கடிக்கும்' என்று ஒரு காரணம் சொல்லுகிறார்கள். ஆம், அது அப்படிக் கடிக்கத்தான் கடிக்கும்; ஓயாமல் கட்டிப்போட்டு வைத்ததனால் அது மூர்க்ககுணமுள்ளதாகிவிட்டதன்றோ? 'நாயைக் கட்டிப்போட்டு வைத்தால் தான் யாராவது அன்னியர் வரும்பொழுது குரைத்து எச்சரிக்கை செய்யும்' என்று சிலர் சமாதானம் சொல்லுகிறார்கள். அயலார் வரட்டும் வராமல்போகட்டும், எப்பொழுதும் ஓயாமல் நாய் குரைத்துக்கொண்டிருந்தால், அயலார் வருவதைக் கவனிக்கிற குணம் அதற்குப் போய்விடுமே; மேலும், நாயை எப்பொழுதும் வழியிலே கட்டிப்போட்டு வைத்தால், வருகிற திருடர் அந்த வழியை விட்டு வேறு வழியாகப் போகவேண்டுமென்பதை நன்றாய்த் தெரிந்துகொள்ளுவார்களன்றோ? அல்லாமலும், விஷங்கலந்த உணவைக் குரைக்கிறநாய்க்குப் போட்டு அதைச் சாந்தப்படுத்திவிட்டுச் சுகமாய் உள்ளே நுழையவும் வழிபார்ப்பார்களே.

ஆகையால் நாய்களைக் கட்டிப்போட்டு வைப்பது பெரிய கொடுமையாம். வழிப்போக்கர்களைக் கடிக்கும்படியான மூர்க்ககுணமுள்ள நாய்களை உடனே கொன்றுபோடுவதைப்பார்க்கிலும், சிலநாள் வரையில் தனியே ஓரிடத்தில் அடைத்துவைத்துப் பாதுகாத்துவந்தால், அந்த மூர்க்ககுணம் அநேகமாக மாறிப்போகும்.

நாய்களின் வாலை யறுப்பதும் காதை அறுப்பதும் மிகவும் கொடுமையான காரியம். அது கொடுமையாவது மாத்திரமேயன்றி, அதனால் பொல்லாத நோய்களும் உண்டாகிவிடும். காதை யறுப்பதனால் காது அநேகமாய்ச் செவிடாகிவிடும், வாய்ப்புண் உண்டாகும். விளையாட்டுக்காகவாவது சிக்ஷையாகவாவது நாயின் காதைப் பிடித்து இழுக்கலாகாது; அதனாலும் நாய் செவிடாகிவிடும்.

ஆகையால் நமது நல்ல தோழனான நாயை இப்படியெல்லாம் பலவிதமாக உபத்திரவப்படுத்தாமல் அன்புடனே ஆதரித்துக் காப்பாற்றிவருவது நமது முக்கியமான கடமையாம்.

மதியுள்ள மீன்.

நான் ஒரு அற்பமான மீன்தான். ஆனாலும், ஏரி, ஸமுத்திரம் முதலான பெரிய ஜலாசயங்களில் விநோதமாக நீந்திக் கரையோரங்களில் வந்து விளையாடுகிற என்னுடைய கோடிக்கணக்கான ஸகோதரர்களைப்பற்றியும் ஸகோதரிகளைப்பற்றியும் என்னைப்பற்றியும் நான் ஒரு கதை சொல்லுகிறேன், சற்றுக் கவனித்துக் கேளுங்கள்: எங்களினத்தில் நாங்கள் அளவற்ற பிராணிகள் இருக்கின்றோம். எங்களுக்கும் பசியென்பது மிகவும் அதிகமே. ஆகையால் நாங்களும் ஓயாமல் இரைதேடித் திரிந்து, எங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் புசித்துக் கொண்டிருக்கிறோம். சிறிய மீன்களெல்லாம் பெரிய மீனுக்கு இரையாகின்றன. ஆகையால், கரைமேல் இருக்கிறவர்கள் பசி அதிகரித்திருக்குமளவில் எங்களைப் பிடித்துத் தின்கிறார்களென்பதைப் பற்றி நான் குறைகூறுவது மூடத்தனமேயாம். எங்களைப் பிறர் பிடித்து வருத்துவது எமக்கு மிகவும் கஷ்டந்தான். அதற்கு நாங்கள் என்னசெய்வது? எங்கள் தலைவிதி அப்படி ஆகிவிட்டதே! ஆனாலும் பிடிப்பவர்கள் எங்களைப் பிடித்தவுடனே, நாங்கள் அப்பொழுதே இறந்துபோகாமலிருக்கும்படி, எங்களைக் கூடைகளிலாவது கொஞ்சமளவு தண்ணீருள்ள பாறைகளின் பள்ளமான விடத்திலாவது போட்டுவைக்கிறார்களென்பதும், அங்கே நாங்கள் வெகுநேரம் இளைப்புற்று வருந்தித் தவிக்கிறோமென்பதும், அநேகம் மனிதர்களுக்குத் தெரியவே தெரியா. நாங்கள் அப்படி வருத்தப்படுவது இருக்கட்டும்; சாகாமலே வெகுநேரம் மரண வேதனை அனுபவித்தால், புசிப்பதற்கு உதவியற்றவர்களாகிவிடுவோம். இதை நாங்கள் அவர்களுக்கு எப்படித் தெரிவிப்பது? எங்கள் பாஷை அவர்களுக்குத் தெரியாது; அவர்கள் பாஷையும் எமக்குத் தெரியாதே. விவேகமுடையவர்களான செம்படவர்கள் மீன்களைப் பிடித்தவுடனே ஏதோ ஒருவகையில் கொன்றுவிடுகிறார்கள். உணவுக்காகக் கொள்ளப்பட்ட தரையிலுள்ள ஜீவன்களை உடனே வதைக்காமல் இப்படி வெகுநேரம் அவஸ்தைப்படும்படி ஒருவரும் விட்டுவைப்பதில்லையே. ஏனென்றால், அப்படி அவை அவஸ்தைப்பட்டால் அவைகளின் மாமிசம் உணவுக்கு ஆரோக்கியமானதாகாது என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். எங்களுடைய உடலும் அப்படிப்பட்டதுதான்.

'நான் விளையாட்டுக்காக மீன் பிடிக்கிறேன்' என்று அநேகம் சிறு பிள்ளைகள் சொல்ல நான் பலதரம் கேட்டிருக்கிறேன்; பெரியவர்களும் பலர் அப்படியே சொல்லிச் செய்கிறார்கள். அவர்கள் எங்களைப் பிடித்தபிறகு செய்வதென்னவென்று கேட்பீர்களோ? பல மீன்களைப் பிடித்து அவர்கள் சூடுண்ட பாறைகளின்மேலும், கொதிக்கக் காய்ந்த தண்ணீரிலும் போட்டு இம்சைப்படுத்திக் கொல்லுகிறார்கள்.

மனிதர்களே! என்னுடைய அற்பமான விண்ணப்பத்தைச் சற்றுக் காதுகொடுத்துக் கேளுங்கள்: எங்களை இம்சிப்பதுபோல உங்களை இம்சித்தால் எப்படியிருக்கும் யோசித்துப்பாருங்கள். அளவற்ற தானியங்களும் காய்கிழங்குகளும் பூமியில் உற்பத்தியாகின்றனவே, அவற்றைத் தின்றால் உங்கள் வயிறு நிறையாதோ? எங்களையே பிடித்துத் தின்னவேண்டுமென்றால், பிடித்தவுடனே எங்களைக் கொன்றுவிடக் கட்டளையிடுங்கள். விளையாட்டுக்காகப் பிடித்து எங்களை வெகுநேரம் வருந்தும்படி விடாதேயுங்கள்.

பூனைகளைப் பாதுகாப்பதெப்படி?

நாயினிடத்திலும் இன்னும் இதரமான ஜீவன்களிடத்திலும் மிகவும் பக்ஷமாயிருக்கிறவர்கள் பலர், பூனைகளைச் சித்திரவதை செய்யாவிட்டாலும், அதிகமாக உபேக்ஷைசெய்து அல்லாடவிடுகிறார்கள் என்பதைக் கண்டு வீட்டுப்பிராணிகளின் அருமை தெரிந்தவர்கள் அநேகர் மிகவும் வருந்தி ஸங்கடப்படுகிறார்கள்.

அநேகம் மனிதர்கள் பூனைகளை வைத்து வளர்க்கும்படி தங்கள் சிறுவர்களுக்குத் திட்டம் செய்துவிடுகிறார்கள்; ஆயினும் அப்பிள்ளைகளுக்குப் பூனைகளைப் பட்சமாகப் பாராட்டும்படி போதிப்பதில்லை; பட்சமாக நடத்துவது இப்படிப்பட்டதென்பதையும் அவர்களுக்கு அறிவிப்பது இல்லை. அவர்கள் தாங்கள்மாத்திரம் வேளைதப்பாமல் பிரதிதினம் கிரமமாகப் போஜனஞ்செய்கிறார்களே; தங்

கள் வீட்டுப் பூனைகள் என்னகதியாயின வென்பதைச் சிறிதும் கவனிப்பதில்லை; அவை பசியால் வருந்துவதைப் பார்த்தும் பரிதாபப்படுவதில்லை. ஏனிப்படிசெய்கிறீர்களென்று யாராவதுகேட்டால், பூனைக்கு நாமே உணவு கொடுக்கும்பட்சத்தில் அது எலிகளைப் பிடிக்கப் பிரியப்படாமல் போகுமென்றும், பூனைக்குத் தனக்குத்தானே உணவு தேடிக்கொள்ளும் திறமை உண்டென்றும், எலிகளைப் பிடிப்பதற்கே யன்றோ பூனையை வளர்ப்பதென்றும் மறுமொழி சொல்லுகிறார்கள்.

இப்படிச் சொல்லுகிற மனிதர்கள், வீட்டிலே பூனைகளுக்குப் பிடிக்க எலிகள் இருக்கின்றனவா இல்லையா என்பதையும் கவனிப்பதில்லை; அப்படி எலிகள் இருந்தாலும், அவை பூனைக்கு அகப்படும்படியான இடத்திலிருக்கின்றனவா என்பதையும் கண்டறிவதில்லை. மேலும், பசித்துப் பட்டினி கிடக்கிற பூனைக்கு எலிகளைப் பிடிக்கும் வல்லமை குறைந்துபோய்விடுமென்பதை அவர்கள் தெரிந்து கொள்வதில்லை. பூனை பட்டினிகிடந்தால், அதற்கு எலிகளை மோந்து அறிகிற திறமை குறைந்துபோகுமென்பது மெய். அன்றியும், எலிகளுக்கும் இயற்கையறிவு உண்டென்பதையும், பக்கத்தில் பூனையிருக்கிறதென்பதை எலிகளும் மோப்பத்தாலும் சந்தடியினாலும் தெரிந்துகொண்டு ஜாக்கிரதையாயிருக்குமென்பதையும், அதனால் வீட்டிலே நிலையாயிருக்கும் பூனைக்கு எலி எப்பொழுதும் சுலபமாகக் கிடைக்கமாட்டாதென்பதையும் அவர்கள் மறந்துபோகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் பூனையை வீட்டிலே வைத்து வளர்ப்பது மிகவும் பாவமான காரியம். பூனையை வளர்ப்பவர்கள் அதற்கு வேளைதப்பாமல் நாள்தோறும் உணவு அளிக்கவேண்டும். பூனைக்குப் பாலினிடத்தில் பிரிய மதிகமாகையால் பிரதிதினம் கொஞ்சம் பால் கொடுப்பது மிகவும் நல்லது. பூனை மாமிசமும் தின்னும். மற்றும் பல பதார்த்தங்களையும் புசிக்கும்.

பிராணிகளைப் பற்றிய உவமைச் சொற்கள்.

சிங்கத்திற்குச் சமமான சௌரியம்.

'சிங்கத்திற்குச் சமமான சௌரியம்' என்று இவ்வுலகில் ஒரு பழமொழி வழங்குகின்றது. மகத்தான கொழுத்த தேகமும், உக்கிரமான முகமும், பயங்கரமான பிடரிமயிரும், சிங்கத்திற்கு இருப்பதனாலும், அது ஒரு காட்டுமிருக மாகையாலும், நெடுங்காலமாய் யாவரும் சிங்கமென்றால் பயப்படும்படியாயிருக்கிறது. முக்கியமாய் மிருகேந்திரனுடைய கம்பீரமான கர்ஜ்ஜனையே எல்லாப் பிராணிகளையும் அஞ்சி நடுங்கச்செய்கிறது. ஆனாலும் ஆலோசிக்குமளவில், சிங்கம் பூனையினத்தைச் சேர்ந்த ஒரு பிராணியேயாம்; அதனால் அது பராக்கிரமசாலியான மிருகமன்று. சிங்கத்தின் சுவபாவத்தை நன்றாய்க் கண்டறிந்தவர்கள், தனக்கு அபாயம்வந்து நெருங்கிய காலத்திலும் சிங்கம் துணிந்து எதிர்ப்பதில்லையென்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்சிங்கத்தினும் உருவத்தில் சிறியதும், பார்வைக்கு அத்தனை பயங்கரமாயில்லாததும் பிடரிமயிரற்றதுமான பெண்சிங்கம் தன் குட்டியைக் காத்துக்கொள்ளவேண்டிய தருணத்தில் அதிகமான வீரியமுள்ளதாகக் காணப்படுகிறது; ஆனாலும், அதுவும் அத்தனையாகத் தைரியத்தில் சிறந்ததன்று; ஆண்சிங்கத்தினும் சிறிது அதிகமான தைரியமுடையதென்று சொல்லலாம். எப்படிப்பட்ட அபாயத்திற்கும் பயப்படாத பராக்கிரமமும், எதிர்த்து யுத்தம்செய்யும் குணமுமுள்ள மற்ற மிருகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், மிருகேந்திரன் மிகுந்த பயங்காளியென்றே சொல்லவேண்டும். இதற்குத் திருஷ்டாந்தமாக, நாம் சற்று நிதானித்து, சிங்கம் தன் இரையைப் பிடிக்கிற விதங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

சிங்கம் தன் இரைகளை வேட்டையாடிப் பிடிப்பதில்லை. காட்டிலுள்ள குளத்திற்கு மான்முதலான மிருகங்கள் தண்ணீர் குடிக்க வருமென்பதைச் சிங்கம் அறிந்து, அக்குளத்திற்குச் சமீபத்திலுள்ள நாணல் கோரை முதலானவைகளின் மத்தியில் பதுங்கிக்கொண்டிருக்கும். இரை தன் அருகே வந்தவுடனே அந்தச் சிங்கம் பூனையைப்போலத் திடீரென்று அதன்மேல் பாய்ந்து தன் பலமான கால்களால் அதை அறைகிறது. அதனால் பிரமை பிடித்து நிற்கும் துரதிர்ஷ்டப் பிராணியின் கழுத்தைத் தன் பற்களால் கடித்து முறித்து, பிறகு அந்தப் பிணத்தைத் தின்பதற்குத் தனக்கு இஷ்டமான ஒரு தனித்த இடத்திற்குச் சிங்கம் பெருமையாய் இழுத்துக் கொண்டுபோய்விடுகிறது. சில சமயங்களிலே சிங்கம் இரை கிடைக்காமல் பசியதிகரித்துச் சிறிது தைரியங்கொண்டு தாம் வசிக்கும் காட்டுக்குச் சமீபத்திலுள்ள நாட்டில் நுழைந்து அங்குள்ள குடிகளின் ஆடுகளைத் திருடிக்கொண்டு போவதுமுண்டு. அதுவும் இராக்காலத்திலேதான் திருட்டுத்தனமாக அவ்விடத்திற்குப் போகும். அக்காலத்திலும் அதனுடைய மனம் பயத்தினால் திடுக்குத் திடுக்கென்று அடித்துக்கொள்ளும்; திடீரென்று ஏதாவது ஒரு சிறிதளவு சத்தமுண்டாகக் கேட்டாலும் அது உடல் நடுங்கித் தவிக்கும். சிங்கம் மிகுதியாயுள்ள இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அரணியங்களுக்குச் சமீபமான இடங்களில் வசிப்பவர்கள் இப்படித் திருட்டுத்தனமாக வருகிற சிங்கத்தைத் தீவட்டி வெளிச்சத்தினால் துரத்தி ஓட்டிவிடலாமென்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

சிங்கம் எந்தப் பிராணியோடும் எதிர்த்து யுத்தம் செய்வதில்லை; மனிதர்களைக் கண்டால் பயந் தோடிப் போய்விடுமென்று பிரயாணிகள் சொல்லு கிறார்கள். அதனால் பெரிதாகவளர்ந்த சிங்கத்தைப் பிடிப்பது மிகவும் அஸாத்தியமான காரியம். விநோதத்திற்காக மிருகங்களைப் பிடித்துவைத்தி ருக்கும் மிருகாசயம் முதலான விடங்களுக்குச் சிங் கத்தை அபேக்ஷிப்பவர்கள், சிங்கம் சிறுகுட்டியா யிருக்கையிலே பிடித்து வளர்க்கிறார்கள். சிங்கக் குட்டி பூனைக்குட்டிபோலவே மிகவும் சாதுவாயிரு க்குமாகையால், அப்பொழுதே பிடித்தால் தனியே கூட்டில் அடைத்து வளர்த்து வசப்படுத்திக்கொள் ளலாம். ஆகையால், சிங்கம் தைரியமும் சௌரிய முமுள்ளதென்று சொல்வது சரியானதன்று; அது பழைய புராண கதையேயாம்.

கோழிகளைக் காப்பாற்றும் வகை.

கோழிகளின் நற்குணம்.

மற்றப் பிராணிகளைப்போலவே கோழிகளும் தம்மிடத்தில் பிறர் காட்டுகிற பிரீதியை மிகவும் மேலாகக் கொண்டாடுகின்றன. தம்மிடத்தில் யார் அதிகமான அன்பும் ஆதரவுமாயிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கோழிகள் அடங்கிச் சொற்படி கேட்டு நடக்கின்றன. பெட்டைக்கோழி தன் குஞ் சுகளைக் காப்பாற்றும் வகையை உற்றுப்பார்த்தால் மிகவு மாச்சரியமாயிருக்கும். பெட்டைக்கோழியா வது மிகுந்த தைரியமும் நன்றியுமுள்ள நல்ல தாயாம். சுயநன்மையை இழந்தாலும் தம் கட மையைப் பூர்த்திசெய்யவேண்டுமென்கிற உண்மை இந்தப் பிரபஞ்ச விதிகளி லொன்று என்பதற்குக் கோழியின் சற்குணமே ஒரு சிறந்த திருஷ்டாந்த மாம். தாய்க்கோழி தான் பட்டினியாய்க் கிடந்து தன் இரையைக் குஞ்சுகளுக்குக் கொடுத்துக் காப் பாற்றுகிறது; அவைகளை ரக்ஷிப்பதற்கு வெகுதீர மாய் யுத்தஞ்செய்கிறது. அப்பொழுதுதான் முட் டையைவிட்டு வெளிப்பட்ட சிறிய கோழிக்குஞ்சு கூடத் தன் தாயின் குரலோசையைத் தெரிந்து கொள்ளுகிறதே; இது மிகவும் ஆச்சரியமல்லவா? கோழிக்குஞ்சுகளின் குரலோசை யெல்லாம் ஒரேமாதிரியாயிருந்தாலும், இது ஒரு குஞ்சின் குரலென்றும், இது வேறு கோழிக்குஞ்சினது குரலென்றும் தாய்க்கோழி தெரிந்துகொள்வதும் ஆச்சரியமே. கோழிகள் பொழுதைத் தாம் நன்கு ய்த் தெரிந்துகொண்டு வேளை தப்பாமல் அந்தந்தக் காலத்தில் கூவிப் பொழுதை அறிவிப்பது பெரிய ஆச்சரியமல்லவா? முக்கியமாய்க் கோழிகள் பின் மாலையில் விடிய யாமப்பொழுதிற்கே யெழுந்து கூவி, அதிகாலையில் எழுந்திராத மூதேவிகளை யெழு ப்பிவிடுகிறது. யாவரும் காலையிலெழுந்து தம்தம் கடமைகளைச் செய்யத்தொடங்கவேண்டுமென்பது கடவுளுடைய கட்டளையென்பதற்கு இதைவிட வேறு திருஷ்டாந்தம் வேண்டுமோ?

கோழிகளுக்குச் செய்யும் கொடுமைகள்.

கோழிகளை வெருட்டுதல்.

கோழிகள் சொற்பகாரணத்தைக் கண்டாலும் அச்சங்கொள்ளும் குணமுடையவைகள்; ஆகை யால் அவற்றை நாம் ஒருபொழுதும் வெருட்டி யோட்டலாகாது. அப்படிச் செய்வது கொடுமை யாவது மாத்திரமேயன்று; அதனால் நஷ்டமும் உண்டாவதனால் அது புத்திகெட்ட காரியமுமாகும். கோழிகளுக்கு நடுக்கமும் பயமுமுண்டாகுமானால் அவை இடுகிற முட்டை அநேகமாய் அளவிலும் குணத்திலும் குறைந்துபோம்.

கோழிக்குஞ்சுகளின் காலுக்கு வளையமிடுதல்.

கோழிக்குஞ்சுகளை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக அவற்றின் காலில் சிலர் வளையங் களை மாட்டிவைப்பது உண்டு. அதுவும் ஒரு கொடு மையான காரியமாம். அவசியம் அப்படிச் செய் தே தீரவேண்டுமானால், அந்த வளையம் காலுக்கு அழுத்தமாயில்லாமல் தளர்த்தியாயிருக்கும்படி முக் கியமாகப் பார்க்கவேண்டும். மேலும், கோழிக் குஞ்சுகள் வளரவளரக் கால்கள் பெரியவையாகு மாதலால், அடிக்கடி அதற்கேற்றபடி வளையங்களை மாற்றிக்கொண்டே வரவேண்டும்.

கோழிகளை இடத்திற்கிடம் கொண்டுபோதல்.

கோழிகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோகவேண்டு மானால், அதற்கு ஏற்ற கருவி மரப்பெட்டி முதலானவைக ளாம். அந்தப் பெட்டி கோழிகள் நேராக நிமிர்ந்து நிற்கப்போதுமான உயரமுள்ளதாயிருக்கவேண்டும். கோழிகள் நெருக்கமில்லாமல் உட்கார அது விசா லமாயுமிருக்கவேண்டும்; தாராளமாய்க் காற்று உள் ளே நுழைந்து உலாவும்படி அந்தப் பெட்டியின் மேற்புறத்தில் பல துவாரங்கள் அவசிய மிருக்க வேண்டும்.

ஆலோசனையில்லாத சில மனிதர்கள் கோழி களைக் கொண்டுபோகும்பொழுது அவற்றின் கால் களைச் சேர்த்துக்கட்டி அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கோழிகளைத் தலை கீழாகத் தொங்க விட்டுக் கொண்டுபோகிறார்கள். இது மிகவும் கொடுமையான காரியம்; ஜீவகாருணிய விதிக ளுக்கு இது முழுமையும் விரோதமானது. சில தேசங்களில் இப்படிப்பட்ட கொடுமைகளுக்குத் தகுந்தபடி அபராதம் விதிக்கச் சட்டம் ஏற்பட்டு அப்படியே விதித்து வருகிறார்கள். எந்த ஜீவஜந்

துக்களேயாயினும், அவசாத்தினுலாவது, உபே க்ஷயாலாவது இப்படித் தலைகீழாகத் தூக்கிக் கொண்டுபோகிறவர்கள், தங்களை மற்ளெருவர் அப்படித் தூக்கிக்கொண்டுபோனுல் தமக்கு எப் படியிருக்குமென்று ஆலோசித்துப் பார்க்கக்கட வர்கள். அப்படிச் சற்று ஆலோசிப்பார்களானுல், பிறகு ஒருநாளும் அவ்விதமான கொடுமை செய்ய அவர்கள் துணியவேமாட்டார்கள். கோழிகளைக் கோணிப்பைகளில் போட்டுவைப்பதும், கோணி களில்போட்டுக் கட்டி இடத்திற்கிடம் அவைகளைத் தூக்கிக்கொண்டு போவதும் கொடிய பாவமாம்.

நோவென்பது மற்றப் பிராணிகளுக்குப்போ லவே சிறகுள்ள பிராணியான பக்ஷிகளுக்குமுண்டு. ஆகையால், நம்மால் எவ்வளவு நன்மை செய்யக் கூடுமோ, அவ்வளவும் நாம் அவற்றிற்குச் செய்து காப்பாற்றவேண்டும். வாயில்லா ஜந்துக்களை நாம் அப்படி ஆதரித்தால், அதற்குத் தகுந்த நன்மை நமக்கு உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை; அப் படியன்றி நாம் அவற்றிற்குத் தீங்கு செய்வோமா னுல், அது எளிய ஜந்துவுக்கு இம்சை உண்டாக்கு வதோடு நமது நல்ல குணத்தைக் கெடுத்து மிருகத் தன்மையை உண்டாக்கிவிடுகிறது.

கோழிக்குஞ்சுகளைக் காப்பாற்றும் முறை.

கோழிக்குஞ்சுகள் முட்டையினின்று வெளிப் பட்ட இருபத்தினுன்கு மணிநேரத்திற்குள் அவற் றிற்கு ஒருவிதமான வருத்தமும் கொடுக்கலாகாது; உணவும் ஊட்டலாகாது. அக்காலத்தில் அவற் றிற்கு வேண்டியவை உஷ்ணமும், ஈரமில்லாமல் உலர்ந்த இடமுமேயாம். இருபத்தினுன்கு மணி நேரத்திற்குப் பிறகு ரொட்டி அடை அப்பம் முத லான பலவகை உணவுகள் கொடுக்கலாம். அந்த உணவு வாய்க்கு மெதுவாயிருக்கப் பாலிலாயினும் தண்ணீரிலாயினும் நனைத்து ஊறவைத்திருக்க வேண்டும். சீதகாலமாயிருந்தால் அதிக உஷ்ண மில்லாத வெந்நீர் கொஞ்சம் கொடுக்கவேண்டும். குஞ்சுபொரித்த முதல் மூன்றுவாரம் வரையில் ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறுதரம் அவற்றிற்கு உணவு கொடுக்கவேண்டும். பத்து நாளானபிறகு கொஞ்சம் கெட்டியான உணவுகளும் கொடுக்க லாம்; அதற்குப் பிறகு நெல் கோதுமை முதலான தானிய மணிகளும் போடலாம். முக்கியமாய்க் கோதுமை முதலான தானியங்களால் செய்த அடை அப்பம் முதலானவைகளே கோழிகளுக் குச் சிறந்த உணவாம். ஒரே தன்மையான உணவு அளிக்காமல் அடிக்கடி உணவுகளை மாற்றிக் கொண்டிருப்பது நல்லது. ஊனுணவும் அளிக்க லாம்; புல், வெங்காயம் முதலானவைகளையும் உணவாகக் கொடுக்கலாம்.

கோழிக்குஞ்சுகளுக்கு இறகு முளைக்குமளவும் அத்தனையாகக் குற்றமில்லை. இறகு முளைக்கத் தொடங்கியபின்பு இறகு வளர்வதற்கு ஏற்ற உணவு அளிக்காவிட்டால், அந்தக் குஞ்சுகள் அநேகமாய் நோய்பிடித்தவைகளாகிவிடும். அக்காலத்தில் கேவ லம் தானியங்களையே உணவாய் அவைகளுக்கு அளிப்பது போதாது. புஷ்டிகொடுக்கும்படியான தும் சிறகு வளரத்தக்கதுமான சிறந்த உணவுகளைக் கொடுத்துக் காப்பாற்றவேண்டும்.

குதிரைகள் செய்துகொள்ளும் விண்ணப்பம்.

எங்கள் அருமையான நண்பர்களே!

எங்களைக் கட்டிய வண்டியில் ஏறிக்கொண்டு போய் நீங்கள் பற்பல விநோதங்களைப் பார்க்கும் காலத்தில் எங்களையும் சற்று நினைக்கும்படியாக வேண்டிக்கொள்ளுகிறோம். நாங்கள் இல்லாவிட் டால் அந்த விநோதக் காட்சிகளைக் காண்பது உங்களுக்குச் சாத்தியப்படாதல்லவா?

மனப்பூர்வமாய் உங்களுக்கு அடிமைப்பட்டு உழைப்பவர்களான எங்களுக்கு அநாவசியகமான துன்பங்களும், என்றைக்கு மழியாத அபாயங்களும் உண்டாகாதபடி எங்களைக் காப்பாற்றுவதற்கு நீங் கள் செய்யவேண்டிய காரியம் விசேஷமாயுண்டு.

எங்களுடைய யஜமானர்கள் எங்களை என்றைக் கும் வைத்திருக்கவேண்டியதுதான்; நாங்களும் அவர்களுடைய இஷ்டப்படி உழைத்து அவர் களுக்குப் பொருள் தேடிக்கொடுக்க உடன்பட் டிருக்கிறோம். ஆயினும், நாங்கள் எங்களால் வஞ் சனையில்லாமல் வேலைசெய்து வருகையில், எங் களைச் சீருமாறு பண்ணுமல் பட்சமாய்க் காப்பாற்ற வேண்டுமென்கிற எண்ணத்தை எல்லாருடைய மனத்திலும் உண்டாக்கிவிடப் பாடுபடும்படியாக உங்கள் எல்லாரையும் வணங்கி வேண்டிக்கொள்ளு கிறோம்.

எங்கள் சக்திக்கு அதிகமான சுமை யேற்றப்பட்ட வண்டிகளிலும், துர்ப்பாக்கியத்தால் கால் நொண் டியான குதிரைகள் கட்டப்பட்ட வண்டிகளிலும் நீங்கள் ஏறமாட்டோமென்று மறுத்து, எங்கள் விஷயத்தில் அன்புபாராட்டவும், சாட்டையால் அடித்து எங்களை அதிக வேகமாய்த் துரத்தாம லிருக்கவும் வண்டிக்காரர்களை உற்சாகப்படுத்து வீர்களானுல், அப்பொழுது எல்லாம் எங்களுக்கு மிகவும் நன்மையாகவே முடியும்.

ஒரு தினத்திலே நாங்கள் அதிகமாகக் கஷ்டப் பட்டு வேலைசெய்தான பிறகு மறுபடியும் எங்களை வண்டியில் கட்டி ஓட்டாதபடி உங்களாலான சகா யம் செய்யுங்கள்.

அதிக வேகமாக ஓடுவதும், ஓரேதினத்தில் ஓயாமல் ஒரேநெட்டாக நெடுநேரம் உழைப்பதும் எங்களை அதிகமாக இளைப்படையச்செய்கின்றன. அப்படியன்றி அன்பாக நடத்தினால், இளைப்படையாமலே பலவாரங்கள் வரையிலும் நாங்கள் கஷ்டப்பட்டு வேலைசெய்வோம்.

நாங்கள் இழுக்கும் வண்டியிலாயினும் மற்றெந்த வண்டிகளிலாயினும் நீங்கள் அதிகமான சுமையை ஏற்றாதேயுங்கள். அநேகமாய் வண்டிக்காரர்களுடைய குற்றமல்ல, உங்களுடைய ஆலோசனைக் குறைவினாலேயே வண்டிகளில் மிதம் மிஞ்சின சுமை ஏற்றப்படுகிறது.

சத்தம் கொடுப்பவர்களைச் சந்தோஷப்படுத்துவதே வெகுவாய் வண்டிக்காரர்களுடைய சுபாவம். தங்களுக்கே நியாயமென்று தோன்றினாலுங்கூட அதைச் செய்யும்படியான தைரியம் அநேகருக்குக் கிடையாது.

பெருஞ் சுமையோடு நாங்கள் பெரிய மேட்டின் மேலாயினும் குன்றின்மீதாயினும் ஏறிப்போக நேரிடும்பொழுது நீங்கள் சற்றுக் கீழே இறங்கி நடக்க உடன்படுவீர்களானால், எங்களுக்கு அது பெரிய உபகாரமாகும்.

மேட்டில் ஏறும்பொழுது நடுவழியில் சற்று நின்று போவதும், மேலே ஏறிய பிறகு சற்று இளைப்பாறுவதும் எங்களுக்கு அதிகமான சௌக்கியத்தைக் கொடுக்கும்.

வண்டியிருசுகளுக்குச் செவ்வையாக எண்ணெய் போட்டால், எங்களுக்கு வண்டியை இழுப்பதில் அவ்வளவாக வருத்தமுண்டாகாது.

குதிரைகளை வேகமாகத் துரத்தி வண்டிக்காரப் பையல்களைப் பந்தயம்விடும்படி பார்த்திராதேயுங்கள்.

எங்களுக்கு அடிக்கடி வாய்வறண்டு குடிக்க நல்ல தண்ணீர் வேண்டுமென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கவேண்டும்.

எங்கள்மேலேறிச் சவாரி செய்யவேண்டுமானால், முதலில் எங்கள் சேணம் செவ்வையாயிருக்கிறதா? எங்கள் முதுகில் புண் இல்லாமலிருக்கிறதா? என்று உற்றுப்பாருங்கள். குதிரைகளின் உழைப்புக்கும் இம்மாத்திரமென ஒரு அளவு உண்டென்றும், ஓயாமல் எங்கள் மீதேறிச் சவாரிசெய்வதும், வண்டியில் கட்டி ஓட்டுவதும் அநேகருக்கு ஒரு விநோதமாயிருந்தாலும் அது எங்களுக்கு ஒரு பெரிய வருத்தமாகுமென்றும், உங்களுடைய பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் போதனை செய்யுங்கள்.

எங்களுடைய வாலை அறுக்காமல் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். வால்மயிர் போய்விட்டால் நாங்கள் ஈக்களும் கொசுகுகளும் கடிக்கையில் அவைகளை யோட்ட வழியில்லாமல் மிகவும் சங்கடப்படுவோம்.

குதிரைக் கடிவாளமும் கண்மூடியும்.

எங்கள் வாயில் கடிவாளம் போடவேண்டிய அவசியமானால், அடிக்கடி அந்தக் கடிவாளத்தை இழுத்து எங்கள் வாயை நோகப்பண்ணாதேயுங்கள். கடிவாளமில்லாமலே நாங்கள் உங்களுக்கு அடங்கி வேலைசெய்வோம். ஐரோப்பா முதலான விடங்களில் அதிகமாய்க் கடிவாளத்தை உபயோகிப்பதில்லை; அந்த வழக்கத்தை நீங்களும் கைக்கொண்டால் எங்களுக்குப் பேரானந்தமாயிருக்கும்.

கண்களுக்கு மூடி ஒன்று கட்டிவிடுகிறீர்களே, சிலசமயம் அதனால் கண் தெரியாமல் இடறும்படியாகிறது. அதை எடுத்துவிடலாகாதா?

நாங்கள் சரியாகத் தீனி தின்னாவிட்டால், எங்கள் பற்களைப் பரிசோதித்துப் பாருங்கள்; அவற்றில் ஏதாவது குற்றமிருக்கும். வைத்தியனுக்குக் காட்டி அதைச் சரிப்படுத்துங்கள்.

மேட்டிலிருந்து வண்டி இறங்கும்பொழுது மெதுவாக ஓட்டவேண்டுமென்பதை மறந்துவிடாதேயுங்கள். சிலசமயம் வேகத்தில் கால் தவறி முழங்காலில் காயம்பட்டாலும் படும்.

எங்களுக்கும் தேகம் அசௌக்கியப்படுகிறசமயம் உண்டென்பது ஞாபகமிருக்கட்டும். அதனால் நாங்கள் எப்பொழுதும் உங்களிஷ்டப்படி ஒரே மாதிரியாய் ஓடுவோமென்று எதிர்பாராதேயுங்கள்.

ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தைச்சேர்ந்த அதிகாரி எவராயினும் நீங்களுள்ள இடத்திலிருப்பாரானால், எங்களைப்பற்றிய சங்கதிகளை நீங்கள் அவரிடம் சொல்லிக்கொள்ளுங்கள். எங்களுக்குச் சௌக்கியம் உண்டாகும்படியான மற்றும் பல மார்க்கங்களையும் விருத்திசெய்யும்படியாகவும் நாங்கள் வணங்கி வேண்டிக்கொள்ளுகிறோம்.

இப்படி ஒரு குதிரை எஜமானனைப் பார்த்து வேண்டிக்கொண்டதுபோலும். குணமற்றவன் மணமற்றவன் என்று பழமொழியுமுண்டு.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1905.